**மதுராவல பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மதுராவல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மதுராவல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் 3.29 ஆம் பிரிவின் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளான காசு மற்றும் காசுக்கு சமமாவைகள் உள்ளடங்காத நீண்டகால சொத்துக்கள் மற்றும் ஏனைய முதலீடுகளின் கைப்பற்றல்கள் மற்றும் அகற்றுதல்கள் ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை | எதிர்வரும் ஆண்டுகளில் குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்வதற்காக காசு வெளிப்பாய்ச்சல்கள் ஏற்படாதிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தலாக ரூபா 10,932,875 காண்பிக்கப்பட்டமையால் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நியமத்தின் 6.10 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்தொன்றின் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் இழிவுப் பெறுமதி குறைக்கப்பட்டதன் பின்னர் பெறப்படுகின்ற பெறுமதியின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு கணிப்பீட்டின் போது சொத்துக்களின் இழிவுப் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் சொத்துக்களின் கிரயத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு சீராக்கப்பட்டிருந்தது. | இழிவுப்பெறுமதி கணிப்பிடுதல் பிரயோக ரீதியில் வசதியீனமாக இருந்தமையால் இழிவுப் பெறுமதியை பூச்சியமாக கருதி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | நியமத்தின் 18.6 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் செல்லுபடியாகின்ற திகதிக்கு முன்னரான கொடுக்கல் வாங்கல்கள், ஏனைய சம்பவங்கள் மற்றும் நிலைமைகள் மற்றும் விளைவுகளாக எழுந்திருந்த சீராக்கங்கள் செல்லுபடியாகும் திகதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மிகையில் சீராக்கமாக அவை நிறுவனமொன்றினால் இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும் | ஆண்டின் போது மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்புக் கணக்கின் மீதி திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்புக் கணக்கின் மீதி ரூபா 225,223,566 தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிதிக்கூற்றுக்களில் தனியான கணக்கொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற மூலதன மானியங்களில் மீளாய்வாண்டின் விரிவான வருமானமாக இனங்காணப்பட வேண்டிய மூலதன மானியம் ரூபா 1,393,272 ஆக இருந்த போதும் நிலையான சொத்துக்களில் பெறுமானத்தேய்வு வீதங்களில் ஏற்பட்ட வழுக்களின் காரணமாக அது ரூபா 1,576,781 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 இன் இறுதிக் கணக்கில் சரி செய்யப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | விரிவான வருமானமாக இனங்காணப்பட வேண்டிய ரூபா 1,393,272 மூலதன மானியம் மீளாய்வாண்டின் விரிவான வருமானக் கூற்றில் வருமானத்தின் கீழ் காண்பிக்கப்படாமையின் காரணமாக ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | மீதியை இனங்கண்டு எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | - மேற்படி - |
| (இ) | விரிவான வருமானக் கூற்றில் ஏனைய விரிவான வருமானங்களின் கீழ் ஆண்டில் மூலதன மானிய பெறுவனவுகள் ரூபா 9,098,515 தொகையில் வருமானத்தில் இனங்காணப்பட்ட மூலதன மானியம் ரூபா 1,393,272 குறைத்து காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா | எதிர்வரும் ஆண்டுகளில் குறைபாடுகள் ஏற்படாமல் கண்காணிக்கப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | 1,576,781 சேர்த்து காண்பிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் ஏனைய விரிவான வருமானம் ரூபா 2,970,053 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்படாத மூலதன மானிய மீதி ரூபா 21,659,476 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது ரூபா 21,475,967 ஆக ரூபா 183,509 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தன் காரணமாக ஆண்டின் மிகை ரூபா 183,509 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 இன் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | - மேற்படி - |
| (உ) | சபைக்குச் சொந்தமான 84 காணிகள் மற்றும் 05 கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இனங்காண முடியாத காணி காணப்பட்டதுடன் இனங்காண முடியுமான சகல காணிகளையும் மதிப்பீடு செய்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது. | மதிப்பீடு செய்து சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் மாகாண சபை செயற்திட்டத்தின் கீழ் கழிவுப்பொருள் முகாமைத்துவ கட்டிடத்தை நவீனமயப்படுத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 248,745 தொகை கட்டிடங்களின் கீழ் இரு தடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 இன் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 338,668 தொகை வேலை இருப்பு விநியோகித்தலாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக வேலைகளின் இருப்பு மற்றும் ஆண்டின் மிகை அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | பன்முகப்படுத்தப்பட்ட நிதியேற்பாட்டின் கீழ் மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 3,410,000 ஆன நார்துபான மற்றும் வல்பிட்ட என்ற | சபைக்கு கையளிக்கப்பட்டவுடன் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு கையேற்று கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

விளையாட்டு மைதானங்களை சபைக்கு கையேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 337,255 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 884,440 ஆகும்.

### 2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் மொத்த வருமானம் ரூபா 75,998,495 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 55,279,748 அதாவது 73 சதவீதமும் அரசாங்கத்திலிருந்து கிடைத்த வரமானமாக இருந்ததுடன் சபையினால் மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 20,718,747 அதாவது 27 சதவீதம் ஆனமையால் சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் உச்ச மட்டத்தில் காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கொவிட் தொற்றுநோயினால் வருமானத்தை அறவிடுதல் குறைவான மட்டத்தில் காணப்பட்டதுடன் எதிர்வரும் ஆண்டில் திட்டம் தயாரித்து வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய மாகாண இறைவரி திணைக்களத்திலிருந்து கோரப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 5,402,135 மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,762,109 தொகைகள் இதுவரை கிடைத்திருக்கவில்லை. | முத்திரைக் கட்டணத்தில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதுடன் நீதிமன்ற தண்டப்பண பட்டோலை தயாரித்து அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவற்றை விரைவாக அறவிடுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும்

நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **நூர்துபான பல்நோக்கு கட்டிடத்தை வாடகைக்கு வழங்குதல்**<br>ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியின் கீழ் புறநெகும செயற்திட்டத்தின் மூலம் 2016 ஆம் ஆண்டில் கிரயம் ரூபா 20,619,845 செலவில் பூர்த்தி செய்யப்பட்ட நாத்துபான பல்நோக்கு கட்டிட நிர்மாணம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) ஹெக்டயர் 0.3277 அளவான மேற்கூறப்பட்ட கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட காணியின் உரித்து மதுராவெல பிரதேச செயலாளரால் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 மே 31 வரையிலும் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை. | கையளிப்பதற்கு தேவையான விண்ணப்பங்கள் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | காணியின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு முன் சாத்தியவள ஆய்வினை செய்து சபையின் தேவையினை இனங்கண்டு நிர்மாண நடவடிக்கைகள் செய்ய வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு தேவையினை இனங்காணாமல் நிர்மாணிக்கப்பட்ட கிரயம் ரூபா 20,619,845 ஆன மேற்கூறப்பட்ட கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டு 2016 நவம்பர் முதல் சில சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் பயன்படுத்தப்பட்ட போதும் அதிக காலம் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது. | நிகழ்ச்சித் திட்டங்கள் சில நடாத்திச் செல்லப்படுகின்றது. | குறைவான பயன்பாட்டுடன் உள்ள சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |